# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,899—1970 මාර්තු 26 වැනි බ්‍රහස්පතින්ද—1970.3.26

14,899 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மாச்சு மாதம் 26 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வோரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யுவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விஸேக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 207 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 209 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 210 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 217 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 212 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 102

எண். டி. 56/பீ/சிஆர்

### தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக சேவை மாற்ற நிறுத்தம்

தரைப்படையின் தொண்டர் படையைச் சேர்ந்த கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970, மார்ச்சு மாதம் 16 ஆம் திகதியிலிருந்து நிரந்தரப் படையிலான தற்காலிக சேவை மாற்றத்தை நிறுத்தப்பெற்றார் :

மேஜர் அலன் ரொலென்ஸ் நுகவெல, சி.எஸ்.ஆர்.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 17 ந் உ.

3–721

1970 இன் இல. 103

எண். டி/ஆர்சிரி/64

### தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வு

அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்கள் கீழ்க் குறிப்பிடப்பெற்ற கனவானை 1970, மார்ச்சு 5 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் நிரந்தரப் படையில் ஒரு கப்ரின் ஆக அரசாணை அமர்வு செய்தலிலும், அவரை அதே திகதியிலிருந்து இலங்கை தரைப்படை வைத்தியச் சிறப் பணிக்கு நியமித்தலிலும் களிப்படைந்துள்ளார் :

திரு. டொன் திலக் நில்கமல் சேனநாயக.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மார்ச்சு 17.

3–707

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் உ.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

1970 இன் இல. 104

எண். டி/விளவ்/17/எ (IV)

## தரைப்படை—சிவிளவ்—அதி உத்தமராம் மகாதேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை உறுதிப் படுத்துதலும் பதவி உயர்ச்சியும்

1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் மேஜர் களாக பதவிநிலை உறுதிப்படுத்துதலும் பதவி உயர்ச்சிப்படுத்துதலும்.

கப்ரின் (தற்காலிக மேஜர்) மாத்தரகே தயா சந்திரரட்ண கருணசேகர, சி.சி.சி.

கப்ரின் ஜோர்ஜ் கித்சிறி விஜேநாயக வீரரட்ண, சி.சி.சி.

கப்ரின் (தற்காலிக மேஜர்) ஆதர் பியதாச ரணவீர, சி.சி.சி.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 11 ந் உ.

3-542

---

1970 இன் இல. 105

எண். டி. 251/ஆர்ஈசிரி/3

## இலங்கை அரச கடற்படை—அதி உத்தமராம் மகாதேசாதி பதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

1968 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இன்ஸ்றக்டர் லெவ்ரினன்ற் கொமாண்டர் ஆவதற்கு :—

லெவ்ரினன்ற் கொமாண்டர் ரீ. மகாதேவா, இலங்கை அரச கடற்படை.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 11 ந் உ.

3-612

---

1970 இன் இல. 106

எண். டி. 251/ஆர்ஈசிரி/3

## இலங்கை அரச கடற்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்ச்சி

1969, ஒற்றோபர் 29 ஆம் திகதியிலிருந்து—லெவ்ரினன்ற் கொமாண்டர் ஆகக் கடவர் :

லெவ்ரினன்ற் ஈ. ஆர். கிறிஸ்ரொபெல்ஸ், இலங்கை அரச கடற்படை.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மார்ச்சு 17.

3-706

---

1970 இன் இல. 107

எண். டி. 251/ஆர்ஈசிரி/3

## இலங்கை அரச கடற்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து லெவ்ரி னன்ற்—கொமாண்டர் (ஈ) ஆவதற்கு :

லெவ்ரினன்ற் (ஈ) எம். ஆர். தர்மசீலன், இலங்கை அரச கடற்படை.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மார்ச்சு 14.

3-705

---

1970 இன் இல. 108

எண்: டி. 251/ஆர்ஈசிரி/3

## இலங்கை அரச கடற்படை அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்ச்சி

1970, பெப்புருவரி 1 ஆம் திகதியிலிருந்து லெவ்ரினன்ற்–கொமாண்டர் ஆகக் கடவர் :

லெவ்ரினன்ற் ஜே. ஜயசூரிய, இலங்கை அரச கடற்படை.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மார்ச்சு 17.

3-708

---

1970 இன் இல. 109

எண். டி. 42/ஆர்ஈசிரி/(III)

## இலங்கை அரச–கடற்படை அலுவலர்களின் நியமனங்கள்

அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள், இலங்கை அரச கடற்படையில் பின்வரும் நியமனத்தை அங்கீகரித்தலிற் களிப்படைந்துள்ளார் :

1970, பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதியிலிருந்து மா. ம. இலங். கப். விஹினியவின் கொமாண்டிங் ஒஃபிசர் ஆகக் கடவர் :—

லெவ்ரினன்ற் எம். ஏ. ஜே. அன்ட்றீஸ், இலங்கை, அ.க.

2. 1970, சனவரி மாதம் 2 ஆம் திகதிய 14,887 ஆம் எண்கொண்ட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1970 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 12 ந் உ.

3-613

---

1970 இன் இல. 110

எண். டி. 252/ஆர்ஈசிரி/4

## இலங்கை அரச ஆகாயப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுகள்

1970, மார்ச்சு 1 ஆம் திகதியிலிருந்து உவிங் கொமாண்டர்களாகக் கடவர் :—

ஸ்குவாட்டன் லீடர் (தற்காலிக உவிங் கொமாண்டர்) டக்ளஸ் விக்கிரம சிங்க (01020) தொழில்நுட்ப/எஞ்ஜி.

ஸ்குவாட்றன் லீடர் (தற்காலிக உவிங் கொமாண்டர்) வேல்லாரச்சிகே டொன் ஹறல்ட் சுமதிபால விஜேசிங்க குணத்திலக்க (01035) ஜீடி/பி.

ஸ்குவாட்றன் லீடர் இரத்தினசபாபதி விவேகாநந்தன் (01034) ஜீடி/பி.

ஸ்குவாட்றன் லீடர் டிக் கத்பேர்ட் பெரேரா (01037) ஜீடி/பி.

அதி உத்தமனின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் யெலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 19 ந் உ.

3-719

1970 இன் இல. 111

எண். டி. 23/ஆர்ாசிரி/133

## இலங்கை அரச ஆகாயப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970 ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆம் திகதியிலிருந்து இலங்கை அரச ஆகாயப்படையிலிருந்து இளைப்பாறுகிறார் :

ஸ்குவட்ரன் லீடர் பெரியண்ணன் சுந்தரம் அழகேஸ்வரன் (01085) வைத்தியம்.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஜீ. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 19 ந் உ.

3–720

---

## நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 112

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. பி. ஆர். சில்வா .. | எண்ணின்மிக்க உத்தியோகத்தரும், மேலதிக நீதவான் முதலியனவும் பலப்பிட்டி | 1970 மார்ச் 16 லிருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஈ. ஏ. விஜகுலசூரிய .. | கண்டி பதில்மேலதிக மாவட்ட நீதிபதி, மாத்தளையில் | ஷை .. | திரு. எஸ். செல்லையா இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். டி. பி. ஜயசேகர .. | இலங்கை நீதிச்சேவையில் பதில் உத்தியோகத்தர் ஒருவராகவும், எண்ணின்மிக்க உத்தியோகத்தராகவும், கொழும்பு பதில் மேலதிக நீதவான் முதலியனவாகவும் | 1970 மார்ச் 19 லிருந்து .. | திரு. ஐ. ஜி. என். டீ ஜே. செனிவிரட்ண இல்லாத காலங்களுக்கும் மறு அறிவித்தல் வரைக்கும் |
| திரு. என். ஜோகனுதன் .. | குருணுகல் மேலதிக நீதவான் முதலியனவாக, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 ஏப்ரல் 7 லிருந்து .. | குருணுகல் நீதிமன்ற 64072 இலக்க வழக்கில் தீரப்பளிப்பதற்கு |
| திரு. வி. என். ஏ. டபிள்யு. விக்ரமசூரிய | மேலதிக நீதவான் முதலியன, கண்டி... | 1970 ஏப்ரல் 5 லிருந்து .. | கண்டி நீதிமன்ற 60597, 63615, 64101 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. எஸ். எம். எம். காசிம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, புத்தளம் | 1970 மார்ச் 8 .. | திரு. கே. பாலசிட்ணர் இல்லாத காலம் |
| திரு. ஆர். ஏ. தென்னக்கோன .. | குருணுகல் மேலதிக நீதவான் குளியப்பிட்டி முதலிய இடங்களில் | 1970 மார்ச் 11 லிருந்து 16 வரை | திரு. டி. எஸ். டி. பி. ஆர். சேனுயக்க இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். சுரவீர .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கேகாலை | 1970 மார்ச் 4 ம், 5 ம் | திரு. கே. சி. ஈ. டீ. அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. என். மாதவருஜா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, திருகோணமலை | 1970 பெப்ருவரி 27 லிருந்து மார்ச் 3 வரை | திரு. டி. சி. டபிள்யு. விக்ரமசேகர இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. ஏ. பி. துரைநாயகம் .. | ஷை .. .. | 1970 பெப்ருவரி 26 ம், மார்ச் 4 லிருந்து 9 வரையும் | ஷை |
| திரு. ரி. யு. கரவிற்ற .. | நுவரகம்பலாத்த முதலியவற்றின் ஊர் நீதிமன்றப்பதில்தலைவர் | 1970 மார்ச் 3 .. | திரு. பி. எஸ். விக்ரமசிங்க இல்லாத காலம் |
| திரு. சி. குமரகே .. | தெகிகம்பல்கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்ற பதில் தலைவர் | 1970 மார்ச் 18 .. | செல்வி. எஸ். தர்மதாச இல்லாத காலம் |
| திரு. பீ. குமரநாயகம் .. | கொட்டியாரப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 மார்ச் 23 .. | திரு. எஸ். ரி. ருஜரட்ணம் இல்லாத காலம் |
| திரு. சி. பி. தெகிகாம .. | மாத்தளைதெற்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 மார்ச் 28 .. | திரு. கே. ஜி. ஜயசேனு இல்லாத காலம் |
| திரு. என். ஏகாம்பரம் .. | தீவுகள் முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மார்ச் 23 லிருந்து 26 ம், 28 ம், 31 ம், ஏப்ரல் 1 லிருந்து 4 வரையும் | திரு. ஐ. கிருபாகரன் இல்லாதகாலங்கள் |

சிறிமெவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573, கொழும்பு 12,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 18 ந் உ.

3–660

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 113

இலங்கை நிருவாகச் சேவையில் பின்வரும் நியமனங்கள் செய்யப் பட்டுள்ளன :—

75/10/48 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எம். எஸ். பெரேரா அவர்கள் 1970, பெப்புருவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சில் கடமையாற்றுவார்.

75/1/15 (எம்சீஎ) V

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எம். எல். ஜே. விக்கிரமரத்தின அவர்கள் 1969, ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை மாத்தறை நிருவாக மாவட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பான அரசாங்க அதிபராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. எச். பீ. த சில்வா அவர்கள் 1969 திசம்பர் மாதம் 1 ஆந் தேதி தொடக்கம் 1970, பெப்புருவரி மாதம் 7 ஆந் தேதி வரை கிராம அபிவிருத்தி, சிறுகைத்தொழில் பணிப்பாளராகக் கடமையாற்று வார்.

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. ஆர். பீ. திலகரத்தின அவர்கள் 1969 திசம்பர் மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பான அரசாங்க அதிபராகக் கடமையாற்றுவார்.

75/10/118 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஏ. பி. எல்கடுவ அவர்கள் 1970 சனவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை பொதுத்திறைசேரியில் கடமை யாற்றுவார்.

75/10/67 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. காசிலிங்கம் அவர்கள் 1970 சனவரி மாதம் 26 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை பொதுத்திறைசேரியில் கடமை யாற்றுவார்.

75/2/2 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. எச். பீ. த சில்வா அவர்கள் 1970 பெப்புருவரி மாதம் 28 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை வர்த்தகப் பணிப்பாளராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. காசிலிங்கம் அவர்கள் 1970 பெப்புருவரி மாதம் 9 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை உதவி நீர்ப்பாசனப் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரீ. பத்மநாதன் அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 9 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை வியாபாரப் பொருட்கொள்வனவு ஆணையாளராகக் கடமையாற்றுவார்.

75/2/61 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த கலாநிதி வீ. இராமநாதன் அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 15 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை பொதுத்திறைசேரியில் கடமை யாற்றுவார்.

75/3/48 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். பீ. நாணயக்கார அவர்கள் 1968, ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை நிதியமைச்சில் உதவிச் செயலாளர் (இ. நி. சே. ,வகுப்பு III), ஆகக் கடமையாற்றுவார்.

75/10/112 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. என். பீ. ஜெகநாதன் அவர்கள் 1970, பெப்புரவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை தேசிய சேமிப்பு இயக்க ஆணையாளராகக் கடமையாற்றுவார்.

75/4/53 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் IV ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. வீ. எல். சீ. பீற்றர்ஸ் அவர்கள் 1969 திசம்பர் மாதம் 19 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை சிரேட்ட உதவிக் கடற் றொழில் பணிப்பாளராகக் கடமையாற்றுவார்.

75/4/16 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் IV ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரீ. ஏ. குணவர்த்தன அவர்கள் 1969 திசம்பர் மாதம் 20 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை காணி, அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/1/14/48 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் IV ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. வீ. தம்பர் அவர்கள் 1970 சனவரி மாதம் 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சின் வெளிநாட்டு வளப் பகுதியில் கடமையாற்றுவார்.

75/1/18/3 (பி) (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் IV ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யூ. கே. ஏ. பீ. பீ. அபேசிங்க அவர்கள் 1970 சனவரி மாதம் 5 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை உள்ளூராட்சி உதவியாணையாளர்களுள் (இ. நி. சே., வகுப்பு IV), ஒருவராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் IV ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. கே. என். சமரசிங்க அவர்கள் 1970 சனவரி மாதம் 28 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் உதவிச் செயலாளர்களுள் ஒருவராகக் கடமை யாற்றுவார்.

75/1/14/95 (எம்சீஎ)

இலங்கை நிருவாகச் சேவையின் IV ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எச். எச். பண்டார அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை பொதுத்திறைசேரியில் கடமையாற்றுவார்.

75/1/23/6 (எம்சீபி) VI.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. ஜி. கெந்தகம அவர்கள் 1969, ஒற்றோபர் மாதம் 26 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கேகாலை நிருவாக மாவட்டத்தில் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (பொதுசனத் தொடர்பு) ஆகக் கடமையாற்றுவார்.

75/10/962 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. வீ. ஏ. ஜே. பீரிஸ் அவர்கள் 1969 நவம்பர் மாதம் 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை உதவித் தொழில் ஆணையாளர் களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/10/1176 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. சூரியாராச்சி அவர்கள் 1969 திசம்பர் மாதம் 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை உதவித் தொழில் ஆணையாளர் களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/10/846 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டி. எச். சீ. திசநாயக்க அவர்கள் 1969 திசம்பர் மாதம் 15 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை உதவி இறப்பர் கட்டுப் பாட்டாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/1/23/6 (எம்சீபி) VI

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். விஜயரத்தின அவர்கள் 1970 சனவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை அனுராதபுர நிருவாக மாவட்டத் தில் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (தலைமையகம்) ஆகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. ஜினதாச அவர்கள் 1970 சனவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை அனுராதபுர நிருவாக மாவட்டத் தில் குறுநு பலாத்த தெற்குப் பிரிவின் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். ஜெயகாந்தன் அவர்கள் 1970 சனவரி மாதம் 2 ஆந் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை யாழ்ப்பாண நிருவாக மாவட்டத்தில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரிவின் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. இ.ஏ. நாணயக்கார அவர்கள் 1970 சனவரி 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை களுத்துறை நிருவாக மாவட்டத்தில் களுத்துறை தோட்டமுனை தெற்குப் பிரிவின் பெரும்பாக இறைவரி உத்தியோகத் தராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திருவாட்டி எம். ஜே. கருணசேகர அவர்கள் 1970 சனவரி மாதம் 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை நுவரேலியா நிருவாக மாவட்டத்தில் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (தலைமையகம்) ஆகக் கடமை யாற்றுவார்.

75/1/14/2 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டி. வீரப்பன அவர்கள் 1970 சனவரி மாதம் 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கமத்தொழில் திணைக்களத்தில் நிருவாக உத்தி யோகத்தர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/1/23/6 (எம்சீபி) VI

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. கே. ரீ. விமலரத்தின அவர்கள் 1970 சனவரி மாதம் 18 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை மாத்தறை நிருவாக மாவட்டத்தின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (தலைமையகம்) ஆகக் கடமையாற்றுவார்.

75/5/33 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஜி. பி. இராஜபக்ஷ அவர்கள் 1970 சனவரி மாதம் 27 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கமத்தொழில் திணைக் களத்தில் நிருவாக உத்தியோகத்தர்களுள் ஒருவராகக் கடமையாற்று வார்.

75/10/541 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஐ. ஏ. எதிரிவீர அவர்கள் 1970 சனவரி மாதம் 27 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கமத்தொழில் சேவை உதவி யாணையாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/1/23/6 (எம்சீபி) VI

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எம். தம்பிமுத்து அவர்கள் 1970 பெப்புருவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை யாழ்ப்பாண நிருவாக மாவட்டத்தில் வடமராட்சி வடக்கு, கிழக்கு பிரிவின் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தராகக் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரீ. பி. இரத்நாயக்க அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கேகாலை நிருவாக மாவட்டத்தில் வெலிகல் கோறளைப் பிரிவின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராகக் கடமையாற்றுவார்.

75/1/23/6 (எம்சீபி) VI

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டி. பி. வியனகெதற அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கேகாலை நிருவாக மாவட்டத்தில் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (தலைமையகம்) ஆகக் கடமையாற்றுவார்.

75 /5/33 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ரீ. எம். விஜயரத்தின பண்டா அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை இத்தீவு முழுவதற்கும் உதவி உணவுக்கட்டுப்பாட்டாளர்களுள் ஒருவராகவும் உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டாளர்களுள் ஒருவராகவும் கடமையாற்றுவார்.

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. எச். டி. விஜேசூரிய அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 2 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/5/27 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. என். சிவசிதம்பரம் அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை சந்தைப்படுத்தல் உதவி ஆணையாளர் களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/5/33 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. இ. பீ. குணசேன அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 7 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கைத்தொழில், கடற் றொழில் அமைச்சில் கடமையாற்றுவார்.

75/10/385 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எம். அந்தோனிமுத்து அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 7 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/5/8 (எம்சீபி) II

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. சீ. எம். டயஸ் அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 10 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை களுத்துறை நிருவாக மாவட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பான அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றுவார்.

75/1/14/61 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எம். இராசநாயகம் அவர்கள் 1970 பெப்புரவரி மாதம் 15 ஆம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை இறக்குமதி, ஏற்றுமதி உதவிக் கட்டுப்பாட்டாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுவார்.

75/1/23/6 (எம்சீபி) VI

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். டபிள்யு. எச். எம். திலகரத்தின அவர்கள் 1970 மார்ச்சு மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தில் பெரும்பாக இறைவரி உத்தியோ கத்தர் (பொதுசனத் தொடர்பு) ஆகக் கடமையாற்றுவார்.

75/10/1043 (எம்சீபி)

இலங்கை நிருவாகச் சேவையின் V ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. கே. டி. பீ. த சில்வா அவர்கள் 1970 மார்ச்சு மாதம் 1 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பான அரசாங்க அதிபரின் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றுவார்.

எம். இராசேந்திரா,
திறைசேரிச் செயலாளர்.

நிதி அமைச்சு,
கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 19 ந் வ.

3-608

---

1970 இன் இல. 114

பி 4/எஸ்வி 14/134, பி 4/எஸ்வி 7/49, பி 4/எஸ்வி 3/16, பி 4/எஸ்வி 20/133, பி 4/எஸ்வி 15/44, பி 4/எஸ்வி 15/37, பி 4/எஸ்வி 2/38, பி 4/எஸ்வி 2/101, பி 4/எஸ்வி 20/163, பி 4/எஸ்வி 20/157, பி 4/எஸ்வி 37/116, பி 4/எஸ்வி 7/51, பி 4/எஸ்வி 16/83, பி 4/எஸ்வி 28/134, பி 4/எஸ்வி 12/41, பி 4/எஸ்வி 9/192.

## நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்

### 82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு நீதி அமைச்சர், அலெக்சாந்தர் பெயர்லி விஜேமான்ன ஆகிய யான்—

1. அப்துல் மஜீத் முகமது அலாவுதீன் அவர்களைக் காலி நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
2. கந்துகே உதேனிஸ் பெரேரா அவர்களைக் கழுத்துறை நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
3. வீரவர்ணகுலசூரியா பூசபதுகே வின்சென் பேர்நாந்து அவர்களைக் கழுத்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவா னொருவராகவும்,
4. அருளம்பலம் சரவணமுத்து அவர்களை யாழ்ப்பாணம் நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
5. பேதுரு கேவகே றிச்சாட் பிரேமரத்ன அவர்களைக் காலி நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
6. மாட்டின் விக்கிரமசிங்க மதநாயக அவர்களை பலப்பிட்டி நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
7. சார்ல்ஸ் ஹென்றி பேர்நாந்து அவர்களைக் கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
8. மாகலந்தகே றெசி ரூபசிங்க அவர்களைக் கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
9. வல்லிபுரம் தம்பாப்பிள்ளை அவர்களை யாழ்ப்பாணம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
10. ஜேம்ஸ் இலங்ககூன் ராசரத்தினம் அவர்களை யாழ்ப்பாணம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவ ராகவும்,
11. வெதரலாலாகே விசயவாதன அவர்களை இரத்தினபுரி நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
12. அலவி ஜிவ்ரி சகீட் அவர்களைப் பாணந்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

13. மானிஸ் டயஸ் ஐயவாதன அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

14. ரத்நாயக முதியன்சேலாகே டிங்கிரிபண்டா அவர்களை குருநாகலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

15. வெவேகெதர புஞ்சி பண்டா அவர்களை மாத்தளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

16. பிற்றிவல கங்கானமலாகே ஆதர் சிங்கோ அவர்களைக் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

ஏ. எப். விஜேமான்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 மார்ச்சு 19 ஆந் உ.

3–649

---

1970 இன் இல. 115

தற்பொழுது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தில் கடமை புரியும் பொது எழுது வினைஞர் சேவையில் நிர்வாக எழுது வினைஞர் வகுப்பின் II ஆம் தரத்திலுள்ள ஒருவரான திரு. இராசையா சுப்பிரமணியம் அவர்கள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் விதிகளின் 42 அ என்னும் விதியின்படி 1970 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ம் திகதி முதல் பொது நம்பிக்கைப் பொறுப்பதுவலர் ஒருவரின் கடமைகளைக் கவனிப்பதற்கென பொது நம்பிக்கை பொறுப்பாளரினல் நியமனம் செய்யப்பட்டுள்ளாரெனவும் அவ்வண்ணம் தொழிலாற்றுகையில் அஞ்சல்களுக்கும் உறுதிச் சீட்டுக்களுக்கும் அவர், பொது நம்பிக்கைப்பொறுப்பாளரின் சார்பில் ஒப்பமிட அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரெனவும் பொது மக்கள் அறிவதற்கென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1968 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி இலக்கம் 14,800 கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1968 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18 ஆம் திகதியில் இலக்கம் 174 கொண்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகின்றது.

எல். எச். ஆர். பீரிஸ்,
நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளர்.

கொழும்பு,
1970 ம் ஞூ மார்ச்சு மீ 10 ந உ.

3–528

---

1970 இன் இல. 116

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

மேவின் ஸமரவீர அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

3–686

---

1970 இன் இல. 117

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

செல்லப்பா வேலுப்பிள்ளை விவேகானந்தன் அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

3–685

---

# அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ. பீ. 7/63.

## 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டம்

### 6 (i) (V) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 6 (i) (V) ஆம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சர் உக்குபண்டா வன்னிநாயக்கா ஆகிய நான், 1966 ம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் விதந்துரையின்பேரில் இதற்குள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள வியாபாரமொவ்வொன்றுக்கும் மேற் குறிக்கப்பட்ட பிரிவு பொருந்துமென இக்கட்டளையின் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

யு. பீ. வன்னிநாயக்கா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
18.3.1970.

அட்டவணை

1. அல்ஹம்பரா ஹொட்டேல்ஸ் லிமிடெட் மூலம் நடாத்தப்படும் ஹொட்டேல்ஸ் அல்ஹம்பரா.

2. ரேணுகா ஹொட்டேல்ஸ் லிமிடெட் மூலம் நடாத்தப்படும் ஹொட்டேல்ஸ் ரேணுகா.

3. சீபாறிஸ் லிமிடெட் மூலம் நடாத்தப்படும் சீபாறிஸ் ஹொட்டேல்.

4. ஹொட்டேல் எயவேஸ் (சிலோன்) லிமிடெட் மூலம் நடாத்தப்படும் ஹொட்டேல் கெப்ரி.

5. லேடிஹில் (டேவரிஸ்ட்) ஹொட்டேல்ஸ் லிமிடெட் மூலம் நடாத்தப்படும் லேடிஹில் டேவரிஸ்ட் ஹொட்டேல்.

3–640/1

---

எல். டி. பி. 7/63.

## 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்

### 16 இ சட்டத்தின் கீழ் அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 இ (i) ஆம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சர் உக்குபண்டா வன்னிநாயக்கா ஆகிய நான், இதற்குள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள முயற்சிகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததெனக் கருதி, சொல்லப்பட்ட முயற்சிகளை, முன்னே சொல்லப்பட்ட பிரிவின் நோக்கங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட முயற்சிகளாக இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

யு. பீ. வன்னிநாயக்கா,
நிதி அமைச்சர்.

கொழும்பு, 18.3.1970.

அட்டவணை

1. ரேணுகா ஹொட்டேல்ஸ் லிமிடெட்.
2. அல்ஹம்பர ஹொட்டேல்ஸ் லிமிடெட்.
3. லேடிஹில் (உல்லாசப் பிரயாணிகள்) ஹொட்டேல்ஸ் லிமிடெட்.
4. சீவாறிஸ் லிமிடெட்.
5. ஹொட்டேல் எயாவேயிஸ் (சிலோன்) லிமிடெட்.

3–640/2

---

எல். டீ. பீ. 7/63

## 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்

### 68அ ஆகிய பிரிவின் கீழான அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறுன 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டிறைவரிச் சட்டத்தின் 68அ ஆகிய பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நிதி அமைச்சர் உக்கு பண்டா வன்னிநாயக்கா ஆகிய நான் இதற்குள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள முயற்சிகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததெனக் கருதி, 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் வேண்டுகோளின் பேரில் மேற்குறிப்பிடப்பட்ட முயற்சிகளை உள்நாட்டிறைவரிச் சட்டத்தின் 68அ ஆகிய பிரிவின் நோக்கத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட முயற்சிகளாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

யு. பீ. வன்னிநாயக்கா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
18.3.1970.

அட்டவணை

1. ரேணுகா ஹொட்டேல்ஸ் லிமிடெட்.
2. அல்ஹம்பரா ஹொட்டேல்ஸ் லிமிடெட்.
3. லேடிஹில் (உல்லாசப் பிரயாணிகள்) ஹொட்டேல்ஸ் லிமிடெட்.
4. சீவாறிஸ் லிமிடெட்.
5. ஹொட்டேல் எயாவேயிஸ் (சிலோன்) லிமிடெட்.

3–640/3

---

எல். டி. பி. 7/63

## 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டம்

### 6 (i) (VI) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 6 (i) (VI) ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சர் உக்கு பண்டா வன்னிநாயக்கா ஆகிய நான், 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட உல்லாசப் பிரயாணச் சபையின் விதந்துரையின் பேரில், முன்னே சொல்லப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (i) ம் உட்பிரிவின் (V) ம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள முயற்சியொன்றின் உபயோகத்துக்குக் கட்டடங்களை ஏற்படுத்தி வைப்பதற்கான முயற்சியொன்றுகவுள்ள " சிலோன் என்டடெயின் மென்ட்ஸ் லிமிடெட் " என்பதை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

யு. பீ. வன்னிநாயக்கா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
18.3.1970.

3–640/4

---

## தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்

1961 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தினுற்றிருத்தப்பட்ட படியான (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 50 ஆம் பிரிவினுலும் 105 ஆம் பிரிவினுலும் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு தொழில், தொழில் வசதி அமைச்சராலாக்கப்பட்டு மேற்சொல்லப்பட்ட 105 ஆம் பிரிவின்கீழ் செனற்றுலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

எம். எச். மொகமட்,
தொழில், தொழில் வசதி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 19 ந் உ.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1969 ம் ஆண்டின் தொழிற்சாலைகள் (முதலுதவி) ஒழுங்குவிதிகளென எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1961 ம் ஆண்டின் 54 ஆம் இலக்க தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டத்திறு திருத்தப்பட்டபடியமைந்த (128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 126 ம் பிரிவில் வரையறுக்கப்பட்ட தொழிற்சாலைகள் யாவற்றுக்கும் இவ்வொழுங்குவிதிகள் பொருந்துவனவாகும்.

3. தொழிற்சாலைகளில் ஏற்படுத்தியமைக்கப்பட்டுப் பேணப்படவேண்டிய முதலுதவிப் பெட்டி அல்லது சிற்றலுமாரி பின்வரும் நியமங்களுக்கு அமைந்திருத்தல் வேண்டும் :—

(1) இயந்திர சக்தி அங்கு உபயோகிக்கப்படுவனவும், பத்துக்கு மேற்படாத ஆட்கள் அங்கு வேலை செய்வனவுமான தொழிற்சாலைகளில், அல்லது இயந்திர சக்தி உபயோகிக்கப்படாதனவும் ஐம்பதுக்கு மேற்படாத ஆட்கள் அங்கு வேலைசெய்வனவுமாகிய தொழிற்சாலைகளில், முதலுதவிப் பெட்டி அல்லது சிற்றலுமாரி ஒவ்வொன்றும், குறைந்தது பின்வருவனவற்றையாவது கொண்டதாய் அமைந்திருத்தல் வேண்டும் :—

(i) கிருமியகற்றிய (சிறிய) காயக்கட்டுத் துணிகள்—6.
(ii) கிருமியகற்றிய (நடுத்தர) காயக்கட்டுத் துணிகள்—3.
(iii) கிருமியகற்றிய (பெரிய) காயக்கட்டுத் துணிகள்—3.
(iv) கிருமியகற்றிய (பெரிய) சூட்டுப்புண் காயக்கட்டுத் துணிகள்—3.
(v) அக்கரிபிளேபிஞ ஐதரோக்குளோரிடியத்தின் 1 : 1000 ஆகப் பெருக்கப்பட்ட நீர்க்கலவை (4 அவு.) கொண்ட போத்தல்—1.
(vi) சுட்டியில் மருந்தளவும் உபயோகிக்கும் முறையும் குறிக்கப்பட்ட சல்வொலற்றைல் (1 அவு.) கொண்ட போத்தல்—1.
(vii) கத்தரிக்கோல்—1.
(viii) கிருமியகற்றிய பருத்திப் பஞ்சு ($\frac{1}{2}$ அவு.) கொண்ட 3 கட்டுகள்.
(ix) (1 அங்குல அகலமுள்ள) ஒட்டுத்துணிச் சுருள்—1.
(x) கண் கழுவற் கலன்—1, தகுந்த கண்கழுவு மருந்து (4 அவு.) கொண்ட போத்தல்—1.
(xi) தொழிற்றிணைக்களத்தால் வெளியிடப்பட்ட முதலுதவித் துண்டுப் பிரசுரத்தின் பிரதி—1.

(2) இயந்திர சக்தி அங்கு உபயோகிக்கப்படுவனவும் அங்கு பணிபுரிவோர் தொகை பத்துக்கு மேற்படவும் ஐம்பதுக்கு மேற்படாமலுமுள்ள தொழிற்சாலைகளில் முதலுதவிப் பெட்டி அல்லது சிற்றலுமாரி ஒவ்வொன்றும், குறைந்தது பின்வருவனவற்றை யாவது கொண்டதாய் அமைந்திருத்தல் வேண்டும் :—

(i) கிருமியகற்றிய (சிறிய) காயக்கட்டுத் துணிகள்—12.
(ii) கிருமியகற்றிய (நடுத்தர) காயக்கட்டுத் துணிகள்—6.
(iii) கிருமியகற்றிய (பெரிய) காயக்கட்டுத் துணிகள்—6.
(iv) கிருமியகற்றிய (பெரிய) சூட்டுப்புண் காயக்கட்டுத் துணிகள்—6.
(v) அக்கரிபிளேபிஞ ஐதரோக்குளோரிடியத்தின் 1 : 1000 ஆகப் பெருக்கப்பட்ட நீர்க்கலவை (4 அவு.) கொண்ட போத்தல்—1.
(vi) சுட்டியில் மருந்தளவும் உபயோகிக்கும் முறையும் குறிக்கப்பட்ட சல்வொலற்றைல் (2 அவு.) கொண்ட போத்தல்—1.
(vii) கத்தரிக்கோல்—1.
(viii) கிருமியகற்றிய பருத்திப் பஞ்சு ($\frac{1}{2}$ அவு.) கொண்ட கட்டுகள்—6.
(ix) (2 அங்குல அகலமுள்ள) ஒட்டுத்துணிச் சுருள்—1.
(x) (1 அங்குல அகலமுள்ள) ஒட்டுத்துணிச் சுருள்—1.
(xi) கண் கழுவற் கலன்—1, தகுந்த கண் கழுவு மருந்து (4 அவு.) கொண்ட போத்தல்—1.
(xii) தொழிற்றிணைக்களத்தால் வெளியிடப்பட்ட முதலுதவித் துண்டுப் பிரசுரத்தின் பிரதி—1.

(3) இயந்திர சக்தி உபயோகிக்கப்பட்டாலும் சரி உபயோகிக்கப்படாவிட்டாலும் சரி 50 ஆட்களுக்கு மேற்பட்டோர் அங்கு பணிபுரியும் தொழிற்சாலைகளில் முதலுதவிப் பெட்டி அல்லது சிற்றலுமாரி ஒவ்வொன்றும், குறைந்தது பின்வருவனவற்றையாவது கொண்டனவாய் அமைந்திருத்தல் வேண்டும் :—

